# நம்மொழி – செம்மொழி

## 1. செம்மொழி என்றால் என்ன?

செம்மொழி என்றால் செம்மையான மொழி என்று பொருள். அதாவது செம்மையாக அமைந்த மொழி. செம்மை என்பது சிறப்பு, ஒழுங்கு என்று பொருள்படும். ஒரு கோவிலுக்குச் செல்கிறோம். அங்கு அழகாக வடிக்கப் பட்ட சிற்பங்களைப் பார்க்கிறோம். அவற்றில் நம் மனதைப் பறிகொடுக்கிறோம். அதுபோன்று அழகாகவும், ஒழுங் காகவும் அமைந்த மொழியைத்தான் செம்மொழி என்று சொல்கிறோம்.

## 2. அழகாகவும் ஒழுங்காகவும் அமைந்த எல்லா மொழிகளுமே செம்மொழி ஆகிவிடுமா?

இல்லை.

அழகு, ஒழுங்கு என்று சொல்வதெல்லாம், மொழியின் இலக்கணத்தை. ஒரு மொழிக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் அமையப் பெற்ற மொழிதான் அழகுடனும், ஒழுங்குடனும் திகழும். அப்படி அழகும் ஒழுங்கும் இருந்தால்மட்டும் ஒருமொழி செம்மொழி ஆகிவிட முடியாது. அது குறைந்தபட்சம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு

முன்பாகவாவது இலக்கியமொழியாக இருந்திருக்க வேண்டும். அதாவது அந்த மொழியில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும்.

### 3. உலகில் இலக்கணங்களோடு அமையப்பெற்ற மொழிகள் பல இருக்கின்றனவே, அவை செம் மொழிகள் ஆகுமா?

ஆகாது.

இலக்கணமும் பழைய இலக்கியங்களும் இருந்தால் மட்டும் ஒருமொழி செம்மொழி ஆகிவிடமுடியாது. அந்த மொழியில் தொடர்ந்து இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். முக்கியமாக வேறு எந்தமொழியின் துணையும் இல்லாமல் அந்தமொழி தனித்து இயங்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வளவும் இருந்தால்தான் ஒருமொழி செம்மொழி என்ற தகுதியைப் பெறமுடியும்.

### 4. 'செம்மொழி' என்று அழைப்பதற்கான தகுதிகள் தமிழ்மொழிக்கு இருக்கின்றதா?

ஆம். இருக்கிறது.

தமிழ்மொழி நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே தோன்றிய மொழி. மூலத்திராவிட மொழியிலிருந்து *(Proto-Dravidian)* முதலில் பிரிந்து உருவானது. அது மொழியாக உருவாகிய காலத்தை உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனாலும் தமிழ் இலக்கிய மொழியாகப் பயன்பாட்டிற்கு வந்த காலத்தைச் சொல்லமுடியும். அது ஏறக்குறைய மூவாயிரம்



ஆண்டுகளுக்கு முன்பிருக்கலாம். அதாவது கி.மு. 1000 முதல் என்று சொல்லலாம்.

### 5. கி.மு. 1000த்திலேயே தமிழ் இலக்கியத் தகுதியைப் பெற்றுவிட்டதா?

இலக்கியத் தகுதி என்றால் எழுதப்படும் மொழி என்று எண்ணிவிடக் கூடாது. ஆனால் வாய்மொழியாகப் பாடல்கள் பாடப்படுவதற்கான ஆற்றல் தமிழ்மொழிக்கு அப்போது இருந்தது. அதாவது பொருள் பொதிந்த, முறையாக அமைந்த பாடல்கள். இப்போது நடவுப்பாட்டு, குலவைப் பாட்டு, முளைப்பாரிப்பாட்டு, கும்மி, தாலாட்டு, ஒப்பாரி என்றெல்லாம் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுகின்றார்கள் அல்லவா? இவற்றைத்தான் வாய்மொழி இலக்கியம் என்கிறோம். இவை பொருள் பொதிந்த, முறையாக அமைந்த பாடல்கள் ஆகும்.

இந்த இலக்கியங்களை யாரும் எழுதிப் படிப்பதில்லை. இவையெல்லாம் காலம்காலமாக மக்களால் வாய்மொழி யாகப் பாடப்பட்டு வருபவை. இதுபோன்ற பாடல்கள் கி.மு.1000க்கு முன்பிருந்தே தமிழ்மக்களால் பாடப்பட்டு வந்தன. அப்படிப்பட்ட பாடல்கள் காலம் செல்லச் செல்ல சீர் செய்யப்பட்டு இலக்கணத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்டு, நடந்த நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டு எழுதப்படும் இலக்கியங்கள் ஆயின. இதற்குச் சான்றாக சங்கப் பாடல்களை நீங்கள் படித்தால் அதில் வாய்மொழிப் பாடல்களுக்கான பல அடையாளங்களைப் பார்க்கலாம்.

**6. அப்படியானால் தமிழ்மொழி எழுத்திலக்கியத் தகுதியைப் பெற்றது எப்போது?**

கி.மு. 200 வாக்கில் தமிழ் இலக்கியங்கள் எழுதப்படும் தகுதியைப் பெற்றுவிட்டன என்று பொதுவாகச் சொல்லப் படுகிறது. இந்தக் காலத்தில்தான் எழுதும்முறை அசோகரால் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் அதற்கு முன்னால் பல நூற்றாண்டுக்காலமாக இலக்கிய இலக்கணங்கள் வாய்மொழியாகவே சொல்லப் பட்டு வந்தன. தொல்காப்பியர் தாம் எழுதிய தொல்காப்பிய இலக்கணத்தில் தமக்கு முந்தைய இலக்கண, இலக்கிய ஆசிரியர்கள் சொன்னவற்றைப் பின்பற்றும்போது 'என்ப', 'என்மனார்', 'என்மனார் புலவர்' என்று பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

**7. தமிழில் முதலில் தோன்றிய இலக்கியங்கள் எவை?**

சங்க இலக்கியங்கள்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று சொல்கிறோ மல்லவா? அவைதான் சங்க இலக்கியங்கள். இவை தமிழரின் இலக்கியச் சொத்துக்கள் மட்டுமல்ல. பண்பாட்டுக் கருவூலங்கள்! வரலாற்றுப் பெட்டகங்கள்!!

**8. 'சங்க இலக்கியம்' என்ற பெயர் எப்படி வந்தது?**

'செம்மொழி என்று அழைப்பதற்கான தகுதிகள் எவை?' என்று முதலில் கேட்டீர்கள் அல்லவா? அதற்கும் விடை இந்தக் கேள்வியில் உள்ளது.



'சங்கம்' என்பது ஓர் இலக்கிய அமைப்பு. அதற்கு அப்போது என்ன பெயர் இருந்தது என்று இப்போது நமக்குத் தெரியாது. ஏனென்றால் அது பிற்காலப் பெயர். மணிமேகலையில் தான் 'சங்கம்' என்ற பெயர் காணப் படுகிறது. சங்கம் என்ற இலக்கிய அமைப்புக்கு அறிவுசான்ற புலவர் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார் (நக்கீரரைப் போல!). இலக்கியங்களைப் படைப்பதும், அரங்கேற்றுவதும், மதிப்பீடு செய்வதும், பழைய இலக்கியங் களைப் பேணிக் காப்பதும், இலக்கணங்களை ஆக்குவதும் 'சங்கம்' என்ற அமைப்பின் முக்கியமான பணிகளாகும்.

பண்டையத் தமிழகத்தில் இதுபோன்று மூன்று சங்கங்கள் இருந்ததாகச் சொல்வார்கள். தற்போதைய குமரி முனைக்குத் தெற்கே நீண்டு பரந்திருந்த நிலப்பரப்பின் தென்கோடியில் (குமரிக்கண்டம்) தென்மதுரை என்ற இடத்தில் தலைச்சங்கம் இருந்தது. தென்மதுரை கடல்சீற்றத்தால் அழிந்ததால் கபாடபுரம் என்ற இடத்தில் இடைச்சங்கம் அமைக்கப் பட்டது. அதுவும் கடல்கோளால் அழிந்ததால் (தற்போதுள்ள) மதுரையில் கடைச்சங்கம் நிறுவப்பட்டது.

இவ்வாறு மூன்று சங்கங்களும் இருந்த காலத்தில் எழுதப்பட்ட இலக்கியங்களைத்தான் சங்க இலக்கியங்கள் என்கிறோம். (தற்போது நமக்குக் கிடைப்பவை கடைச்சங்க காலத்து இலக்கியங்களே).

**9. சங்க இலக்கியங்கள் மொத்தம் எத்தனை?**

ஏற்கனவே சொன்னதுபோல சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று இரண்டாகப்

பிரித்திருக்கிறார்கள். சங்க காலத்தில் புலவர்கள் பாடிவிட்டுப் போன பாடல்களைத் தொகுத்தவர்கள் இவ்வாறு எட்டுத் தொகை என்றும், பத்துப்பாட்டு என்றும் பாகுபாடு செய்திருக்கிறார்கள். சிறிய அடிகளைக் கொண்ட எட்டுத் தொகுப்புகளை 'எட்டுத்தொகை' என்றார்கள். நீண்ட அடிகளைக் கொண்ட பத்துப் பாடல்களைப் 'பத்துப்பாட்டு' என்றார்கள்.

எட்டுத்தொகையில் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய எட்டுத் தொகுதிகள் உள்ளன. பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய பத்து நீண்ட பாடல்கள் உள்ளன.

## 10. எட்டுத்தொகைப் பாடல்களைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்!

எட்டுத்தொகைப் பாடல்கள் சிறியவை. அதாவது 3 அடி முதல் 40 அடிவரை உள்ளவை.

இவற்றில் **அகநானூறு** என்பது அக ஒழுக்கத்தைப் பற்றிய நானூறு பாடல்களின் தொகுதி. அகஒழுக்கம் என்பது சுருக்கமாகச் சொன்னால் காதல். இந்தத் தொகுப்பில் உள்ள பாடல்கள் 13 முதல் 31 அடிவரை உள்ளவை. அகச்செய்திகள் அனைத்தும் அழகுற அமைந்துள்ளதால் இது **'அகநானூறு'** என்று சிறப்பிக்கப்பட்டது. பண்டைத் தமிழரின் அக ஒழுக்கத்தை (காதல் - திருமணம் - குடும்பம்) அறிந்துகொள்ள வேண்டுமென்றால் அதை விளக்கமாகச் சொல்வது இந்த அகநானூறே ஆகும்.

அடுத்தது **'புறநானூறு'**. அகநானூறு போன்றே புறச் செய்திகளை (வீரம், போர், கொடை, ஆட்சிச் சிறப்பு, சமுதாய நிலை, மக்கள் வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கங்களை, நாகரிகம், பண்பாடு போன்றவை) விரிவாகச் சொல்வது புறநானூறு ஆகும். இதுவும் 400 பாடல்கள் கொண்டது. பாடல்கள் 4 முதல் 40 அடிவரை உள்ளவை. தொகுத்த பிறகு 2 பாடல்கள் காணாமற் போய்விட்டன.

**'நற்றிணை'** என்பது அகச்செய்திகளை விரிவாகவும் இல்லாமல், சுருக்கமாகவும் இல்லாமல் அளவாகச் சொல்வது. இதற்கேற்ப இந்தப் பாடல்களும் 9 அடி முதல் 12 அடிவரையே உள்ளன. 'திணை' என்றால் 'ஒழுக்கம்' என்று பொருள். எனவே பண்டைத் தமிழருடைய காதல் ஒழுக்கத்தைப் பற்றி 'அளவான அடிகளால் அழகாகச்சொல்லும் நல்ல பாடல்கள்' என்ற பொருள்பட இதற்கு 'நற்றிணை' என்று பெயர் தந்தார்கள். இதுவும் 400 பாடல்கள் கொண்டது.

அடுத்து **'குறுந்தொகை'**. இதுவும் அகப்பாடல்களின் தொகுப்பு. இதில் 400 பாடல்கள் உள்ளன. இதில் உள்ள பாடல்கள் 4 அடிமுதல் 8 அடிவரை உள்ளன. அகச் செய்தி களைக் குறுகிய (சின்னசின்னப்) பாடல்களில் சொல்வதால் இதற்குக் குறுந்தொகை என்று பெயரிட்டார்கள்.

இதற்கு அடுத்தது **'கலித்தொகை'**. இதுவும் நீண்ட அகப்பாடல்களின் தொகுப்புதான். மொத்தம் 150 பாடல்கள்

உள்ளன. இதன் சிறப்புகள் என்னவென்றால், இது நாடகப் பாடல் போன்ற அமைப்புடையது. இதில் ஒவ்வொரு திணையைப் பற்றியும் ஒவ்வொரு புலவர் பாடியுள்ளார். குறிஞ்சித் திணையைப் பற்றி கபிலர் 29 பாடல்கள் பாடியுள்ளார். முல்லைத் திணையைப் பற்றி சோழன் நல்லுருத்திரன் 17 பாடல்கள் பாடியுள்ளான். மருதத் திணையைப் பற்றி மருதன் இளநாகனார் 35 பாடல்கள் பாடியுள்ளார். நெய்தல் திணையைப் பற்றி நல்லந்துவனார் 33 பாடல்கள் பாடியுள்ளார். பாலைத்திணையைப் பற்றி பெருங்கடுங்கோ 35 பாடல்கள் பாடியுள்ளான்.

அடுத்தது 'ஐங்குறுநூறு'. இதுவும் ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறு பாடல்கள் அடங்கிய அகப்பாடல் களின் தொகுப்பு. இதில் உள்ள பாடல்கள் 3 முதல் 6 அடிகள் கொண்டவை. கலித்தொகையைப் போலவே ஒவ்வொரு 100 பாடலையும் ஒரு புலவர் பாடியுள்ளார்.

குறிஞ்சித்திணைப் பாடல்களைக் கபிலர் பாடியுள்ளார். முல்லைத் திணைப் பாடல்களைப் பேயனார் பாடியுள்ளார். மருதத்திணைப் பாடல்களை ஓரம்போகியார் பாடியுள்ளார். நெய்தல் திணைப் பாடல்களை அம்மூவனார் பாடியுள்ளார். பாலைத்திணைப் பாடல்களை ஓதலாந்தையார் பாடியுள்ளார்.

அடுத்தது, 'பதிற்றுப்பத்து'. இது புறநானூறு போல புறச் செய்திகளைப் பற்றிய தொகுப்பு ஆகும். இதற்குப் பல சிறப்புகள் உண்டு. இது சேரமன்னர்களைப் பற்றித் தொடர்ச்சியாகப் பத்துத் தலைமுறைகளுக்குப் பாடப்பட்ட இலக்கியம். இதனால் சேரமன்னர் வரலாற்றை - சேரநாட்டு



வரலாற்றை - இப்பாடல்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு மன்னனைப் பற்றியும் பத்துப் பத்துப் பாடல்களை வெவ்வேறு புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அப்படியானால் 100 பாடல்கள் நமக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 80 பாடல்கள்தான் கிடைத்துள்ளன. முதல் பத்துப் பாடல்களும், கடைசிப் பத்துப் பாடல்களும் ஓலைச்சுவடியைக் கறையான் அரிக்க அல்லது காணாமல் போக - எஞ்சியது 80 பாடல்கள் மட்டுமே.

கடைசியாகப் 'பரிபாடல்'. இது அகப்பாடல்களும் புறப்பாடல்களும் சேர்ந்த ஒரு கலவை இலக்கியம். கிட்டத்தட்ட பக்திப் பாடல்களின் தொகுப்பாகவே இது உள்ளது. காரணம் இதில் முருகனைப் பற்றி 8 பாடல்களும், திருமாலைப்பற்றி 6 பாடல்களும், வையை ஆற்றை வாழ்த்தி 8 பாடல்களும் கிடைத்துள்ளன. மொத்தம் இயற்றப்பட்ட பரிபாடல்கள் 70 ஆகும். ஆனால் இன்று 22 பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன.

## 11. பத்துப்பாட்டுத் தொகுப்பைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறீர்களா?

பத்து நீண்ட பாடல்களின் தொகுப்புதான் 'பத்துப் பாட்டு'. ஒவ்வொரு நீண்ட பாடலையும் ஒரு புலவர் பாடியிருக்கிறார். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு மன்னனைப் பற்றியதாகும்.

இதில் 'குறிஞ்சிப்பாட்டு'க்கு மட்டும் ஒரு சிறப்பு உண்டு. அது என்னவென்றால், 'ஆரிய மன்னன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தப் பாடியது' என்ற குறிப்பு அந்தப்

பாடலுக்குக் கீழே காணப்படுகிறது. 'தமிழ் அறிவுறுத்தப் பாடியது' என்றால், 'தமிழ் சொல்லித் தருவதற்காகப் பாடப்பட்டது' அல்ல. 'தமிழ்' என்றால் 'அகப்பொருள்' என்பார்கள். அதாவது ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இருக்கின்ற உள்ளம் கலந்த காதல். 'காதலித்தவனையே கைப்பிடிக்க வேண்டும்' என்பதற்காக அவள் பலவிதமான முயற்சிகளை மேற்கொள்வாள். இத்தகு முயற்சிகள்தான் 'அறத்தொடு நிற்றல்' என்று சொல்லப்படுகிறது. 'சத்தியத் திற்குக் கட்டுப்படுதல்' என்பதுதான் இதன் பொருள். இந்த முயற்சிகள்தான் குறிஞ்சிப்பாட்டில் சொல்லப் பட்டுள்ளன. இதைத்தான் 'தமிழ் அறிவுறுத்தற்கு' என்று பண்டைத் தமிழர்கள் சொன்னார்கள். குறிஞ்சிப் பாட்டைப் பாடியவர் கபிலர்.

**'முல்லைப்பாட்டு'** என்பது முல்லைத் திணை ஒழுக்கம் (அதாவது தலைவன் போருக்குச் சென்று திரும்பிவரும் வரையில் அவன் வரவை எதிர்பார்த்துத் தலைவி காத்திருத்தல்) பற்றிக்கூறுகிறது. இதுதான் பத்துப்பாட்டில் சிறிய பாடல். 103 அடிகள். இது அகப்பாடல்.

**'பட்டினப்பாலை'** என்பது பாலை ஒழுக்கம் (அதாவது பிரிவு) பற்றிய பாடல். இதில் காவிரிப்பூம்பட்டினம் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. **'நெடுநல்வாடை'**யும் பிரிவுபற்றிய பாடல்தான். இதில் பிரிவுபற்றிய சோகம் வெகு நேர்த்தியாகச் சொல்லப்படுகிறது.

**'மதுரைக்காஞ்சி'** என்பது காஞ்சித்திணை பற்றியது (அதாவது நிலையாமை). இதுதான் பத்துப்பாட்டிலேயே மிகநீண்ட பாடல். 782 அடிகளைக் கொண்டது. 'இரவிலும் தூங்காத மதுரை' மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பதை இப்பாடல் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். மதுரை மாநகரம் பகலில் எப்படிக் காட்சி யளித்தது? இரவில் எவ்வாறு இருந்தது? என்னென்ன வியாபாரங்கள் நடைபெற்றன? நகர் அமைப்பு எப்படி இருந்தது? போன்ற நுணுக்கமான விவரங்கள் இதில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

இந்த ஐந்து பாடல்கள் தவிர, எஞ்சிய ஐந்து பாடல்கள் ஆற்றுப்படையாக - அதாவது ஆற்றுப்படுத்தும் பாடல்களாக உள்ளன. ஒரு வள்ளலை அல்லது மன்னனைக் கண்டு பரிசில் பெற்றுவரும் ஒருவர் அவ்வாறு பரிசு பெறச் செல்லும் ஒருவரை வழியில் கண்டு 'இன்ன வழியில் நீ சென்று அவ்வள்ளலைக் கண்டு பாடினால் நான் பெற்றது போன்ற பரிசிலை நீயும் பெறலாம்' என்று வழிகாட்டுவது தான் ஆற்றுப்படைப் பாடல். இந்தப் பாடல்கள் வழியாகப் பண்டைத் தமிழகத்தின் நிலவியல் அமைப்பு, ஊர் வருணனை, மக்கள் குடியிருப்புகள், உணவுப் பழக்கங்கள், நாகரிகம், பண்பாடு, வாழ்க்கைமுறை, நம்பிக்கைகள், கடவுள் வழிபாடு, தொழில்கள், பொருளாதார நிலை ஆகிய சமூகவியல் செய்திகளை அறிந்து கொள்ளலாம்.

இந்தப் பத்துப் பாடல்களையும் சேர்த்து சங்க இலக்கி யங்கள் மொத்தம் 2381 பாடல்களின் தொகுப்பு என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

## 12. பல நூற்றாண்டுகளாகப் பாடிய பாடல்கள் மொத்தம் 2381 தானா?

இல்லை, இல்லை.

புலவர்கள் எவ்வளவோ பாடல்களைப் பாடினார்கள். அவற்றை ஓலைச்சுவடிகளில் அவர்களோ, அவர்கள் காலத்தில் பிறரோ, அல்லது அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்களோ எழுதி வைத்திருக்கக்கூடும். அவற்றுள் கால வெள்ளத்தால் அழிந்தவைபோக எஞ்சிய பாடல்கள்தான் இவை.

இந்தப் பாடல்கள் எல்லாம் எழுதப்பட்டது ஒரு காலம். தொகுக்கப்பட்டது இன்னொரு காலம். இவ்வாறு பல்லாயிரக் கணக்கில் எழுதப்பட்ட பாடல்களில் பல பாடல்கள் மறைந்துவிட்டதால் அவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வு அந்தக் காலத்து ஆட்சியாளர்களுக்கு இருந்தது. அதனால், அவர்கள் தொகுக்கும் பணியில் இறங்கினார்கள். கற்றறிந்த புலவர்கள் தமிழ்நாட்டின் நாலாபக்கமும் சென்று பாடல்கள் பலவற்றைச் சேகரித்தனர். இவற்றைத் தொகுப்பதற்கான சில வரன்முறைகளை வைத்துக்கொண்டனர். இப்படித் தொகுக்கப் பட்டதைத்தான் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றார்கள்.

இந்த எட்டுத் தொகை நூல்களுள் நற்றிணைப் பாடல்களைத் தொகுக்கும் பணியை ஏற்றுக்கொண்டவன் பாண்டியன் பன்னாடுதந்த மாறன் வழுதி. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுக்க ஏற்பாடு செய்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. அதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகிழார் மகனார் உருத்திரசன்மன். ஐங்குறுநூற்றைத் தொகுக்க ஏற்பாடு செய்தவன் சேரன் யானைக்கண் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. அந்தப்பணியை ஏற்றுக் கொண்டவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். இப்படி எட்டுத்தொகையின் ஒவ்வொரு தொகுப்பும் உருவாக்கப் பட்டது.

பாடல்களைத் தொகுக்கும்போது முழுமையாகக் கிடைக்கப்பெற்ற, சிறந்த, காலத்தை வென்றுநிற்கும் கருத்தமைந்த பாடல்களை மட்டும் எட்டுத் தொகுப்புக் களாகவும், பத்துப்பாடல்களாகவும் தொகுத்தார்கள்.

இவ்வாறு பாடப்பட்டதிலும், தொகுக்கப்பட்டதிலும் சிறந்து நிற்கக்கூடிய பாடல்களாக இவை இருந்ததால்தான் இவற்றைச் ‘செம்மொழி இலக்கியம்’ அல்லது ‘செவ் விலக்கியம்’ என்று அழைக்கிறோம். இப்படிப்பட்டவைதான் இந்த 2381 பாடல்கள்.

## 13. சங்கப்பாடல்களை மட்டும்தான் செம்மொழி இலக்கியம் என்று சொல்கிறோமா?

இல்லை.

சற்றேறக்குறைய கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய தமிழ் இலக்கியங்களைத்தான் செம்மொழி இலக்கியம் என்கிறோம். அப்படிப்பார்த்தால் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் ஆகியவை செம்மொழி இலக்கியம் என்ற தகுதியைப் பெறுகின்றன.

**14. சங்ககாலம் என்று சொல்கிறோமே, அது எது?**

கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை உள்ள காலத்தையே சங்க காலம் என்கிறோம். அதாவது மதுரையைத் தலைமை யிடமாகக் கொண்ட 'சங்கம்' என்ற அமைப்பின் வாயிலாகத் தமிழ் இலக்கியப் படைப்புகள், மதிப்பீடுகள், அரங்கேற்றங்கள் நிகழ்ந்தகாலம். இந்தக் காலத்தைச் சேர்ந்ததுதான் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள். இவற்றைத்தான் சங்க இலக்கியம் என்கிறோம்.

**15. சிலப்பதிகாரம் சங்க இலக்கியம் ஆகாதா?**

சிலப்பதிகாரம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது. சமண பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்ற காலத்தில் எழுதப்பட்டது. எனவே, இதனை சங்கம் என்ற அமைப்போடு தொடர்புடைய இலக்கியமாகக் கருதுவதில்லை. ஆனால் பண்டைத் தமிழ் இலக்கியம் என்று சொல்லும்போது எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுடன் வைத்து எண்ணப்படுகிறது.

**16. தமிழுக்கு எப்போது செம்மொழித் தகுதி வழங்கப் பட்டது?**

2004-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6-ஆம் தேதி பாராளு மன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

17.9.2004 அன்று முறையான அறிவிப்பு வந்தது.

12.10.2004 இல் தமிழ்மொழியைச் செம்மொழி என்று அறிவித்து இந்திய அரசு ஆணை வெளியிட்டது.

**17. சமஸ்கிருதமொழிக்கு இருக்கும் அத்தனைத் தகுதிகளும் தமிழுக்கு இருந்தாலும் அதற்குச் செம்மொழித் தகுதியைத்தர ஏன் இவ்வளவு காலதாமதம் ஆனது?**

இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால் 'தமிழுக்குச் செம்மொழித் தகுதி உண்டு' என்பதற்கான ஆதாரங்களை அடுக்கடுக்காகத் தந்த அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியப் பல்கலைக்கழக தெற்கு - தெற்காசியவியல் துறைப் பேராசிரியர் ஜியார்ஜ் ஹார்ட் சொல்வதைத்தான் குறிப்பிட வேண்டும். அவர் சொல்கிறார்:

''தமிழ் ஏன் இதுநாள் வரையில் செம்மொழியாக அங்கீகரிக்கப்படவில்லை என்றால் அதற்கு அரசியல் காரணத்தைத் தான் சொல்ல வேண்டும். தமிழைச் செம்மொழியாக அறிவித்துவிட்டால் மற்ற இந்திய மொழிக்காரர்களும் 'எங்கள் மொழியையும் செம்மொழி யாக அறிவிப்புச் செய்யுங்கள்' என்று போராட்டம் நடத்தலாம் என்ற அச்சம். இது தேவையில்லாத ஒன்று. மேலைநாடுகளில் எல்லாம் இப்படி இல்லை. அங்கு கிரேக்கம் செவ்வியல் மொழி என்று அறிவித்துப் பல ஆண்டுகள் ஆகிறது. ஆனால் உடனே 'ஆங்கிலத்தையும், பிரெஞ்சுமொழியையும் செம்மொழி என்று அறிவிப்புச் செய்யுங்கள்' என்று யாரும் அங்குப் போராடுவதில்லை. அந்த எண்ணமே அங்கு இல்லை. தமிழுக்குச் செம்மொழித் தகுதி தர மறுப்பது, இந்தியப் பண்பாடு பெருமையும், பழமையும் வளமையும் மிக்கது என்பதை மறுப்பதற்குச் சமமாகும்'' (மொழிபெயர்ப்பு).

இப்போது புரிகிறதல்லவா? தமிழ்மொழியின் ஒவ்வொரு முன்னேற்றமும் இப்படித்தான் பல தடைகளையும் எதிர்ப்புகளையும் சந்தித்து அதில் வெற்றி கண்டு வந்துள்ளது. இதில் பெரும் பங்கு ஐரோப்பியத் தமிழ் அறிஞர்களுக்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

## 18. ஜியார்ஜ் ஹார்ட் பற்றி...?

முன்பே சொன்னது போல இவர் கலிபோர்னியப் பல்கலைக் கழகப் பேராசிரியர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நல்ல புலமை உள்ளவர். கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களை அந்தந்த மொழியிலேயே படித்து ஆய்வு செய்யும் வல்லவர். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் குறித்து நிறைய நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று *'Poets of the Tamil Anthologies'* என்பதாகும். இந்த நூலை அவர் தன்னுடைய பெற்றோர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். இவர் மனைவி முனைவர் கௌசல்யாவும் இவரைப்போலவே ஒரு தமிழ் ஆராய்ச்சியாளர். ஜியார்ஜ் ஹார்ட் சமஸ்கிருதத்திலும் புலமைமிக்கவர் என்பதால், தமிழையும் சமஸ்கிருதத்தையும் ஒப்பிட்டு *"The Poems of Ancient Tamils : Their milieu and their Sanskrit Counterparts"* என்ற நூலை 1975லேயே வெளியிட்டார். இருமொழிப் புலமையாளரான இவரது 11.4.2000 நாளிட்ட மின்-அஞ்சல் அறிக்கைதான் உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்றது; 'தமிழ், செம்மொழிதான்' என்று மாற்றுக் கருத்துடையோரும் ஏற்றுக்கொள்வதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது.



## 19. தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று இதற்குமுன் கோரிக்கைகள் எழுந்ததுண்டா?

உண்டு.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே 1902-இல் 'பரிதி மாற்கலைஞர்' என்று தன் பெயரைத் தூய தமிழ்ப்பெயராக மாற்றிக்கொண்ட வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இந்தக் கோரிக்கையை எழுப்பித் தமிழுக்குச் செம்மொழி ஆகும் தகுதி முற்றிலும் உண்டு என்பதை நிறுவினார்.

1918-ஆம் ஆண்டு மார்ச் 30, 31-இல் திருச்சியில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் 'தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும்' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்படி அவ்வப்போது தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று பல அமைப்புகள் வேண்டுகோள்கள் விடுத்தன; தீர்மானங்கள் நிறைவேற்றின; அறிக்கைகள் வெளியிட்டன.

இதன் உச்சக்கட்டமாகத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

இறுதியில் தமிழைச் செம்மொழியாக இந்திய அரசு அறிவித்தது.

**20. செம்மொழியாக அறிவிக்கப்பட்ட இந்திய மொழிகள் என்னென்ன?**

பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம், அறபு, உருது - இப்போது தமிழ்.

**21. செம்மொழித் தமிழ் இலக்கியத்தில் ஆய்வு செய்பவர்களுக்கு விருது ஏதேனும் வழங்கப் படுகிறதா?**

ஆம்.

'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை' என்ற பெயரில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தம் சொந்தப் பணம் ரூ. 1 கோடி நிதி வழங்கி அமைத்துள்ளார்கள். இதில் வரும் வட்டித் தொகையைக் கொண்டு (ரூ. 10 இலட்சம்) ஆண்டுதோறும் செம்மொழித் தமிழாய்வில் சிறந்த அறிஞருக்கு விருது வழங்கப்படும்.

**22. இந்த விருதினை முதலில் பெற்றவர் யார்?**

பேராசிரியர் அஸ்கோ பார்போலா.

இவர் பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சின்கி பல்கலைக் கழகத்தில் இந்தியவியல் துறைப் பேராசிரியராகப் பணி யாற்றுகிறார். சிந்துவெளி அகழ்வாய்வுச் சின்னங்களில் காணப்படும் எழுத்துக்கள் திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையே என்று பல ஆதாரங்களுடன் இவர் நிறுவி யுள்ளார். இது குறித்து நிறைய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், நூல்களும் ஆங்கிலத்தில் எழுதிவெளியிட்டுள்ளார். இவை உலகம் முழுவதும் உள்ள ஆய்வறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. இதனால் இவருக்கு 2009-ஆம் ஆண்டிற்கான 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ்விருது' கோவையில் நடந்த உலகச் செம்மொழித் தமிழ் மாநாட்டின்போது வழங்கப்பட்டது.

**23. இந்த விருதில் என்னென்ன அடங்கும்?**

ரூ 10 இலட்சம் தொகைக்கான காசோலை,

மதிப்புச் சான்றிதழ்,

நினைவுப்பரிசு.

**24. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு எப்போது, எங்கே நடைபெற்றது?**

2010, சூன் 23 முதல் 27 வரை கோவையில் நடை பெற்றது.

**25. இதற்கு முன்பு உலக அளவில் நடைபெற்ற தமிழ்மொழி இலக்கிய மாநாடுகள் எவை?**

முதல் உலகத்தமிழ் மாநாடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 1966இல் நடைபெற்றது. இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டினை அப்போதைய தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா 1968இல் சென்னையில் நடத்தினார். மூன்றாவது மாநாடு பாரிசிலும் (1970), நான்காவது மாநாடு (1974) யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன. ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்தபோது 1981இல் மதுரையில் நடைபெற்றது. ஆறாவது மாநாடு 1987இல் மீண்டும் கோலாலம்பூரிலும்,